5. கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) எடப்பாடி மருத்துவமனை கட்டப்பட்டும் திறக்கப்படாமல் இருப்பது குறித்து.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' சேலம் மாவட்டம் எடப்பாடியில் கட்டப்பட்டுள்ள அரசு பொது மருத்துவமனை ஓராண்டுக் காலமாகியும் திறக்கப் படாமல் இருப்பது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சேலம் மாவட்டம் எடப்பாடி நகரத்தில் அரசு மருத்துவமனை 16 படுக்கைகள் கொண்ட வார்டு, நுண்கதிர் பிரிவு ஆகியவை கட்ட 2—8—1985-ல் அனுமதி வழங்கப்பட்டு, கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு 11—3—1988 அன்று பொதுப் பணித்துறையின ரால், மருத்துவத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

2. இம்மருத்துவமனையில் 16 படுக்கைகள் கொண்ட பிரிவு, எக்ஸ்ரே பிரிவு ஆகியவைகள் செயல்படுத்தத் தேவையான உப கரணங்கள் வாங்கவும், கூடுதல் பணியிடங்களை உருவாக்கவும், ஏனைய தொடரும் செலவினங்கள் அனுமதிக்கவும் 1989-90-ம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் சேர்க்கப்பட்டு செயற்படுத்த அரசின் ஆய்வில் உள்ளது.

3. 1989-90-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் ரூபாய் 4.82 இலட்சம் தொடரும் மற்றும் தொடரா செலவினமாக அனுமதிக் கப்பட்டுள்ளது. மேலும், கீழ்க்கண்ட பணியிடங்களை உரு வாக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1. உதவி மருத்துவ அலுவலர்	1
2. செவிலியர்	2
3. நுண்கதிர் இயக்குநர்	1
4. இருட்டறை உதவியாளர்	1
5. அறுவை அரங்கு உதவியாளர்	1
6. இளநிலை உதவியாளர்	1
7. செவிலியர் உதவியாளர்	1
8. துப்புரவு பணியாளர்	1

1989 ஏப்ரல் 27] [டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

4. புதிய வார்டு மற்றும் நுண்கதிர் பிரிவுகளுக்குத் தேவை யான உபகரணங்கள், எக்ஸ்ரே கருவி ஆகியவை பொருத்தப் பட்டவுடன் புதிய கட்டிடம் முழுமையாகச் செயல்படத்துவங்கும்.

திரு. க. பழனிசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் ஆப்பரேஷன் செய்துக்கொள் வதற்கும், எக்ஸ்ரே எடுப்பதற்கும் 40 கிலோ மீட்டர் தூரத்தி லுள்ள சேலம் அரசு பொது மருத்துவமனைக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கேதான் இப்படிப்பட்ட சிகிச்சை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, விரைவிலே இந்த மருத்துவ மனையை திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவரவர்களே, கடந்த காலங்களிலே பல மருத்துவமனைகள் கட்டப்பட்டு அவை, திருமணமாகி முதலிர வுக்குக் காத்திருக்கும் தம்பதியரைப்போல நீண்டகாலமாக திறக் கப்படாமலேயே வைக்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப் பினர் அவர்களுடைய தொகுதியிலே கூட கட்டப்பட்டு மூன்று ஆண்டுகளாகியும் திறக்கப்படாத மருத்துவமனை இருப்பதை நினைவுபடுத்துகிறேன். அதைப்போன்று பல மருத்துவ மனைகள் திறக்கப்படாமலேயே இருக்கின்றன என்பதைக் கருத்தில்கொண்டு திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்த மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் 16 படுக்கைகள் கொண்ட பிரிவு, எக்ஸ்ரே பிரிவு ஆகியவைகளைச் செயல்படுத்தத் தேவையான உபகரணங்கள் வாங்கவும், கூடுதல் பணியிடங்களை உருவாக்க வும், ஏனைய தொடரும் செலவினங்கள் அனுமதிக்கவும் 1989-90-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் சேர்க்கப்பட்டு செயற் படுத்த அரசின் ஆய்வில் உள்ளது. ஆகவே, அத்தகைய உப கரணங்கள் வாங்கி முடிந்தவுடன் விரைவில் திறப்பதற்கு முயற்சி எடுக்கப்படும்.

திரு. க. பழனிசுவாமி: தலைவரவர்களே, ஆப்பரேஷன் செய்வதற்கு எம். எஸ். பட்டப்படிப்பு படித்த அறுவை சிகிச்சை டாக்டர்களையும் அதிகமான குழந்தைகள் சிகிச்சைக்கு வருவ தால் குழந்தைகள் சிகிச்சைக்கு டி. சி. எச். படித்த டாக்டர் களையும் நியமிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கின்ற தெய்வசிகாமணி: அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

7 சட்ட முன் வடிவுகள்.

சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு 1989

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவைப்'' பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.